

மூளை மற்றும் சிறுநீரகத்துக்கு செல்லும் மகா தமனி வீக்கத்திற்கான நவீன சிகிச்சை குறித்த பயிலரங்கம் மியாட் மருத்துவமனையில் நடந்தது. இதில், பல்வேறு நாடுகளில் இருந்து கலந்து கொண்ட நிபுணர்களை மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ் நினைவு பரிசு வழங்கி கவுரவித்தார். அருகில், மருத்துவமனை நிறுவனர் மோகன்தாஸ்.

### தென்னிந்தியாவில் முதல்முறையாக

# மகாதமனி வீக்க நெளிவுக்கு நவீன சிகிச்சை தொடக்கம்

## மியாட் மருத்துவமனை சாதனை

சென்னை, ஜன. 10: உடல் முழுவதும் ரத்தத்தை கொண்டு செல்லும் குருதி நாளமான அயோர்ட்டாவில் (மகாதமனி) ஏற்படும் குருதி வீக்க நெளிவு (அயோர்டிக் அன்யூரிசம்) ஆகும். உடலில் இதயத்திலிருந்து மூளை மற்றும் இரண்டு கைகளுக்கு செல்லும் அயோர்டிக் ஆர்ச் எனப்படும் கழுத்துக்கு அருகில் உள்ள மகாதமனி பகுதியில் அல்லது சிறுநீரகங்கள், நுரையீரல், வயிறு மற்றும் குடல் பகுதிகளுக்கு ரத்த நாளங்கள் செல்லும் தொராகோ அப்டாமினல் மகாதமனி ஆகிய இடங்களில் ரத்த நாள வீக்கம் ஏற்படலாம். இதனால் ரத்த நாளங்கள் சாதாரண அளவை விட ஒன்றரை மடங்கு வீக்கமடையும். இதன் காரணமாக, மூளைக்கு செல்லும் ரத்த நாளம் பாதிக்கப்பட்டு வீக்கமடைந்தால் மார்பு வலி, முதுகு வலி, மாரடைப்பு அறிகுறிபோல் தோன்றும். சிறுநீரகத்திற்கு செல்லும் ரத்த நாளம் பாதிக்கப்பட்டால் சாப்பிட முடியாது. ஜீரண கோளாறு, முதுகு வலியால் அவதிப்படுவர்.

இந்த வீக்கத்தை பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் வீக்கம் வெடித்து உயிருக்கே ஆபத்தாக முடியும் தருணம் உண்டு. இந்தியாவில் இந்நோயால் 2 லட்சம் முதல் மூன்று லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இந்நோய் பற்றிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் 1,000 முதல் 1,500 பேர் மட்டுமே சிகிச்சை பெறுகின்றனர்.

இந்நோய் பாதித்தவர்களுக்கு முதன்முதலில் தென்னிந்தியாவில் நவீன முறையில் கலப்பு அறுவை சிகிச்சை மற்றும் திறந்த நிலை அறுவை சிகிச்சை மேற்கொள்கின்றனர். இதில் பெருந்தமனி மூளைக்கு செல்லும் முக்கிய ரத்த நாளத்தில் மேற்கொள்ளப்படும் திறந்த நிலை சிகிச்சை மூலம் ரத்தத்தை 18 டிகிரியிலிருந்து 20 டிகிரி செல்சியஸ் வரை குளிர்வித்து ரத்த சுழற்சியை தற்காலிகமாக சிறிது நேரம் நிறுத்தி அறுவை சிகிச்சையை மேற்கொள்கின்றனர்.

மற்றொரு சிகிச்சை வயதான மற்றும் நுரையீரல், சிறுநீரகங்களில் உள்ள பிரச்னைக்கு அறுவை சிகிச்சை செய்ய முடியாத நிலையில் கலப்பு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும் இச்சிகிச்சை இரண்டு தொடையிலிருந்து முக்கிய ரத்த நாளங்கள் வழியாக செய்யப்படும். இதில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உறை போன்ற அமைப்பு அமைக்கப்படும். சில நோயாளிகளுக்கு இரண்டு விதமான சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படும்.

இந்த 2 சிகிச்சைகளும் தென்னிந்தியாவிலேயே முதல்முறையாக மியாட் மருத்துவமனையில் செய்யப்படுகிறது. திறந்த நிலை அறுவை சிகிச்சைக்கு ரூ.2.5 லட்சம் முதல் ரூ.3.5 லட்சமும், கலப்பு அறுவை சிகிச்சைக்கு ரூ.6 முதல் 7 லட்சமும் இரண்டு சிகிச்சையும் சேர்த்து செய்யும்போது ரூ.10 லட்சம் வரை செலவாகும்.

இதற்கான பயிலரங்கு தொடக்க விழா நேற்று நடந்தது. இதில் டாக்டர் மோகன்தாஸ், மல்லிகா மோகன் தாஸ், பிரித்வி மோகன்தாஸ் மற்றும் சர்வதேச அளவிலான பத்துக்கும் மேற்பட்ட நிபுணர்கள் கலந்து கொண்டனர். டாக்டர் மோகன்தாஸ் வரவேற்றார்.